**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 21 /2021 PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சக்திவேல் | தந்தை/கணவர் பெயர்: ராமசாமி | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>02.07.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது அய்யாப்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 , 2 யைத் தெரியும். எதிரியைத் தெரியும். எனது ஊரைச் சேர்ந்தவர்கள். அ.சா.1 எனக்கு உறவினர். அ.சா.2 என்னுடன் படித்தவர். கடந்த 23.05.2020ம் தேதி மாலை 05.00 மணியளவில் எங்கள் ஊர் மெயின் ரோட்டில் உள்ள சக்தி என்பவரது பெட்டிக்கடையில் நான், ஜெயசங்கர், மாணிக்கம் ஆகியோர் இருந்தோம். அ.சா1 ஊருக்குள் இருந்து இரு சக்கர வாகனத்தில் மெயின் ரோட்டிற்கு வந்தார். நாங்கள் இருந்த கடையின் அருகே உள்ள பாலத்தில் எதிரி இருந்தார்.

2. எதிரி ராஜா அ.சா.1 யை வாங்கள் என்று அழைத்தார்.அ.சா.1, ராஜாவின் அருகே சென்று என்ன மாப்பிள்ளை என்று கேட்டார். எதிரி, அசா.1 அருகே வந்தவுடன் அவரை என்னடா தேவுடியா மகனே என சொல்லி கன்னத்தில் அறைந்தார். இரு சக்கர வாகனத்துடன் அ.சா.1 யை எதிரி மிதித்து கீழே தள்ளிவிட்டு ஏன்டா பேஸ்புக்கில் கிளர்க் பெயரை போடுற என் பெயரை போட மாட்டியா, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மீண்டும் அசிங்கமாக பேசினார் .

3. அருகே இருந்த தென்னை மட்டையை எடுத்து எதிரி அ.சா.1 யைத் முதுகில் அடித்தார். மீண்டும் அடித்த போது கையால் தடுத்தார். ரொம்ப அடித்தவுடன் அ.சா.1 வலியில் கத்தினார். பிரச்சனை பெரியதாகி விட்டது என்று நான், ஜெயசங்கர், மாணிக்கம் ஆகியோர் சென்று சண்டையை விலக்கிவிட்டோம். ராஜாவை இவ்வாறு

செய்கிறீர்கள் உங்களை போலீஸில் ஒப்படைக்க வேண்டும் என்று நான் கேட்டுகொண்டேன். என்னை உதறிவிட்டு ராஜா ஓடிவிட்டார். அ.சா1 யை இரு சக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்தேன். அவர் கார் அமர்த்துமாறு கூறினார். எனவே காரில் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் புகார் கொடுக்கவேண்டுமென்று சொன்னதால் எஸ்.எஸ் கோட்டை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு அதன்பின்னர் மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

4. போலீசார் என்னை மறுநாள் எங்கள் வீட்டில் வைத்து விசாரித்தார். போலீஸ் விசாரணையில் நான் வேலம்மாள் மருத்துவமனைக்கு அ.சா.1 யை அழைத்து சென்றாதாகவும், அவ்வாறு செல்லும் வழியில் அ.சா.1 புகார் கொடுக்க சென்ற போது நான் உடன் இருந்ததாகவும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அ.சா.1 எனக்கு சித்தப்பா முறை ஆகும். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் காலம்கொரோனா காலம என்றாலும், ஊரடங்கு உத்தரவு பிறக்கப்பட்டிருந்தது என்றாலும் சரியல்ல. பிறப்பிக்கப்பட்டு இருந்தது.

5. நான் எஸ். எஸ். கோட்டையில் ஆட்டோ ஓட்டிகிறேன். சம்பவம் இடம் முறையூர் செல்லும்தென்வடல் தார் ரோடு என்றால் சரிதான். எதிா பாலத்தில் உட்கார்ந்து கொண்டு அ.சா.1 யை அழைத்து அவர் வந்தவுடன் அவரை அசிங்கமாக பேசி அறைந்தாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தென்வடல் ரோட்டில் மேற்குபுறம் பாதை உள்ளதா என்றால் இல்லை. ஊருக்கு இருபுறமும் பாதை உள்ளது என்றால் நாலு ரோட்டில் இருந்து கிழக்கு தார்ரோட்டில் ஊருக்கு செல்லும் வழியில் பிரச்சனை நடந்தது.

6. நான் சொல்வது போல் எதிரி, அ.சா.1 யை அசிங்கமாக பேசி அடித்து தாக்கவில்லை என்றாலும் எதிரி மீது உள்ள முன்பகை காரணமாக அ.சா.1 எனது சித்தப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு எந்த காயமும் கிடையாது என்றாலும், அ.சா.1 க்கு உள்ள இருதய நோய்க்கு சிகிச்சை பெறுவதற்கு மருத்துவமனை சென்றார் என்றால் சரியல்ல.

எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் நான் சம்பவத்தை நேரடியாக பார்த்திருந்தால் சம்பவம் இடம் குறித்து சரியாக சாட்சியம் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.